**செய்தி வெளியீடு எண்: 347** **நாள்: 28.05.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் நலனுக்காக முதியோர் ஓய்வூதியம், மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியம் மற்றும் விதவைகள் ஓய்வூதியம் உள்ளிட்ட 9 வகையான ஓய்வூதிய நலத்திட்டங்களை வழங்கி வருகிறது. மேற்படி ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் நலனுக்காக தொடர்புடைய வங்கிகளின் மூலம் பணப்பற்று அட்டை (ATM Card / Rupay Card) வழங்க மாநில வங்கி ஒருங்கிணைப்பாளர்களின் குழுமத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டதற்கிணங்க, முதற்கட்டமாக பணப்பற்று அட்டை (ATM Card / Rupay Card) தேவை என விண்ணப்பம் அளித்த பயனாளிகளுக்கு தொடர்புடைய வங்கிகள் மூலம் பணப்பற்று அட்டை (ATM Card / Rupay Card) வழங்க வங்கிகள் தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பணப்பற்று அட்டை (ATM Card / Rupay Card) பெற விண்ணப்பித்துள்ள பயனாளிகள் தொடர்புடைய வங்கிகளை அணுகி தங்களுக்கான பணப்பற்று அட்டையை (ATM Card / Rupay Card) பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதுவரை பணப்பற்று அட்டை (ATM Card / Rupay Card) கோரி விண்ணப்பிக்காதவர்கள் அதற்கான விண்ணப்பத்தினை தொடர்புடைய வங்கியில் உடனடியாக சமர்ப்பிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

முனைவர். கொ.சத்யகோபால், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**